உ

கணபதிதுணை.

அச்சுவேலி

உலவிற்குளம்

சித்திவிநாயகர்

ஊஞ்சல்.

இது

ஷ டி கோயில் எசமானாயிருந்த

ஸ்ரீமத். நா. ஆறுமுகம்பிள்ளை அவர்கள்

விரும்பியவாறு,

அச்சுவேலி

பிரமஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்

அவர்களால் இயற்றப்பட்டது.

இரண்டாம்பதிப்பு.

கலாநிதியந்திரசாலை

பருத்தித்துறை.

1936.

679

VANMIYUR, MADRAS-

உ

கணபதி துணை.

உலவிற்குளநாதர்

ஊஞ்சல்.

இராகம்—வசந்தபைரவி.

காப்பு.

திருவளரு மைம்முகத்துச் சிவனா ரீன்ற
தேவனடி யார்கடமைச் சேர்ந்து வாட்டிக்
கருவளரும் பிறப்பிவினிக் கல்வா வண்ணம்
கருணையினா லன்னவரைக் கழலில் வைக்கு
முருவளரு மூலவிற்கு ளஞ்சேர் தேவே
யுன்மீதி லன்பில்லேல னேதை வூஞ்சல்
அருள்வளரு நின்னடியா மலர்கள் நாளு
மானதுணை யாகியெனைக் காப்ப தாமே.

நூல்.

பொன்பூத்த நால்வேதத் தூண்க ளாகப்
பொருவிலிதி காசமருங் கால்க ளாக
மின்பூத்த வுபநிடதம் பலகை யாக
வேதாங்க மிக்கபெருங் கயிற தாக
மன்பூத்த வாகமங்கள் விட்ட மாக
மயலகற்றும் பிரணவமாம் பீட மேறித்
தென்பூத்த நல்லுலவிற் பதியில் வாழுந்
திகழ்சித்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். (க)

ஆதவனு முடுபதியுங் கவிகை தாங்க
வன்பினொடு சமீரணர்கள் கவரி வீச
மேதகுசீர்ச் சோமனெழில் வட்டந் தாங்க
மேன்மையுறு சலபதிநற் சிவிறி யாற்றப்
பேதமிலா நிருதிகோ டிகம தேந்தப்
பெருங்கூற்ற னணியினொடு வாள்கைத் தா[ங்கத்
தீதகலு நல்லுலவிற் பதியில் வாழுந்
திகழ்சித்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். (உ)

MADRAS-41

இந்திரன்றா னன்பினொடு களாசி தாங்க
இறையவனு முமையுமகங் கருணை கூரக்
கந்தருவர் விஞ்சையர்கள் கானம் பாடக்
கடவுளர்தம் மகளிர்களி நடன மாட
நந்தலிலா நாரதமா முனிவன் றானுந்
நாதமுறத் தந்திரியை நன்கி சைக்கச்
சிந்துறையு நல்லுலவிற் பதியில் வாழுந்
திகழ்சித்தி விநாயகரே யாடீ ரூஞ்சல் (௩)

தண்ணுமையே துடியினொடு பேரி தக்கை
தாங்கரிய குடமுழவே திமிலை யாதி
யெண்ணரிய வியங்கள்பல பூத ரார்ப்ப [ப்ப
எழில்மறையோர் வேதவொலி யெங்கு மார்
நண்ணிடுநற் றொண்டரொலி நண்ண வெங்குந்
நான்முகனு மாலுமிரு பாங்க ரேத்தத்
திண்ணமதாம் நல்லுலவிற் பதியில் வாழுந்
திகழ்சித்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். (௪)

அரிக்கினிதா றளித்தாரே யாடீ ரூஞ்சல்
அடல்யானை முகற்காய்ந்தீ ராடீ ரூஞ்சல்
அரற்கினிய காதலரே யாடீ ரூஞ்சல்
அறுமுகற்கு முன்னவரே யாடீ ரூஞ்சல்
அரிக்குமையா ளிட்டகொடு மொழிதீர்த் துற்றீ
ஆதிமுதன் மொழிவடிவீ ராடீ ரூஞ்சல் [ய்
திருத்தமுறு நல்லுலவிற் பதியில் வாழுந்
திகழ்சித்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். (௫)

கரிமுகத்துத் தூமணியே யாடீ ரூஞ்சல்
கடவுளருக் காரமுதே யாடீ ரூஞ்சல்
புரிநூல்சேர் மார்பினரே யாடீ ரூஞ்சல்
புகழடியர்க் கடியவரே யாடீ ரூஞ்சல்
திரிநயன முற்றவரே யாடீ ரூஞ்சல்
திண்சடைசேர் நாயகரே யாடீ ரூஞ்சல்
திரிவில்பெரு நல்லுலவிற் பதியில் வாழுந்
திகழ்சித்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். (௬)

உச்சிதனி லுற்றமுடி யொளியை வீச
உயர்நுதலி னோடைமின நிகரி லாத
வச்சிரமா மருப்பொன்றிற் குலவு கிம்புரி
வயங்கியிட மெய்ச்செவியாங் கவரி தூங்க
மெச்சுமங் குசமோடு பாசந் தானும்
மிளிர்தந்த லட்டுகமு மினிது மேவச்
செச்சையுறு நல்லுலவிற் பதியில் வாழுந்
திகழ்சித்தி விநாயகரே யாட ரூஞ்சல். (எ)

தீதகலாப் புறச்சமய விருள்க ணீங்கச்
சித்தாந்த சைவமினி தோங்கி மேவச்
சேதமிலா வன்பர்குழு நாளும் போற்றத்
திருநீறுங் கண்டிகையுஞ் சிறந்தே யோங்க
மேதகுசீர்த் தொண்டர்குழு நாளும் பல்க
மேன்மையுறு கருணைநனி செய்து மிக்க
தீதகலு நல்லுலவிற் பதியில் வாழுந்
திகழ்சித்தி விநாயகரே யாட ரூஞ்சல். (அ)

சரியைமுதற் றொழில்கள்நனி பூணு வோர்தாஞ்
சார்ந்தினிதி னொருபாக நின்றே யார்ப்ப
மருவுகுயில் சேகயமு மொருபா லார்ப்ப
மாசிலறு கார்தாம மினிதி னூடப்
புரிமுந்நூ லணிமுனிவ ரொருபா லார்ப்பப்
புகல்பூத வனிகமுமிக் கார்ப்ப வார்ப்பத்
தெரிவுபெறு நல்லுலவிற் பதியில் வாழுந்
திகழ்சித்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். (கூ)

பூவாழி பொற்சின்னம் பொலிந்து வாழி
புவனமலி யடியரெலாம் போற்றி வாழி
ஆவாழி அந்தணரு மறமும் வாழி
அரசுநெறி யனுதினமு மருகா வாழி
பாவாழி மாமகங்கள் பலித்து வாழி
பன்னுசிவ வாகமங்கள் பரந்து வாழி
மாவாழி பொன்முகில்கள் மலிந்து வாழி
மன்னுலவிற் குளத்தேவன் வாழி வாழி. ()

6755
6755
83919

எச்சரிக்கை.

இராகம்—சாவேரி. தாளம்—ஆதி.

மிக்குளவிற் குளமமரு மேலாவெச்சரிக்கை
மிடிகடிய விடர்தடியும் மெய்யேயெச்சரிக்கை
ஆனைமுக மானவரு ளையாவெச்சரிக்கை
ஆதிமுடி வின்றியுறை யன்பாவெச்சரிக்கை
முன்னுபவர் முன்னில்வரு முதல்வாவெச்சரிக்கை
முன்னைப் பழவினைகள்களை முனைவாவெச்சரிக்கை
அரியோன்முதற் றேவர்தொழு மண்ணுவெச்சரி
[க்கை
அரனார்தமக் கேற்றமுறு மையாவெச்சரிக்கை.

பராக்கு.

இராகம்—புன்னாகவராளி. தாளம்—சம்பை.

வெய்யதுயர் நீக்குமொரு வேந்தேபராக்கு
வேலவனுக் கானதுணை வேளேபராக்கு
மாறில்கய மாமுகத்து மன்னேபராக்கு
மாசகலு மாமறைக்கு மறையேபராக்கு

தேறுமடி யாரவரின் தேவேபராக்கு
தேடுமை புத்ரனெனுந் தெளிவேபராக்கு
நானேயெனு முனைப்பகற்று நண்பாபராக்கு
நாடுலவிற் குளமமரு நாதாபராக்கு.

மங்களம்.

இராகம்—ஆனந்தபைரவி. தாளம்—ஆதி.

அத்திமுகத் துத்தமர்க்கு மங்களம்—அருள்
ஆனசிவ புத்திரர்க்கு மங்களம்.
ஐந்துகர வண்ணனுக்கு மங்களம்—அணி
ஆக்குமொரு தந்தருக்கு மங்களம்
மிக்குலவை நாதருக்கு மங்களம்—மிடி
மீட்குமளி வீரருக்கு மங்களம்
அன்பர்தமக் கன்பருக்கு மங்களம்—அரும்
அங்குசக்கை மேலவர்க்கு மங்களம்.

MAHAMAHOPADHYAYA